புனித தோமையார் மலை(இ)குரோம்பேட்டை, மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
முன்னிலை . திரு. எஸ். தாமோதரன், எம்.எஸ்.ஸி,எம்.எட்.,பிஜிடிசிபி.,
மூ.மு. எண். 512 /அ4 / 2019 நாள். 28/05/2019.

----

பொருள் : தொடக்கக் கல்வி – இளம் மழலையர் பள்ளிகள் – சிட்லப்பாக்கம் ஒன்றியம் – முடிச்சூர், கிட்ஸ் டேல் இளம் மழலையர் பள்ளி – 2018–2019ம் கல்வியாண்டில் துவக்க அனுமதி ஆணை வழங்குதல் – சார்ந்து.

பார்வை : 1) அரசாணை நிலை எண்.206. பள்ளிக் கல்வி (தொடக்கக் கல்வி2(2) துறை) , நாள். 13.01.1999.
2 தமிழ்நாடு அரசிதழ் எண். 256. நாள். 22.12.2015
3 சிட்லப்பாக்கம், வட்டாரக் கல்வி அலுவலர்–III ந.க.எண்.1776/அ4/2018, நாள் 26.12.2018.

-------

இளம்மழலையர் பள்ளிகளுக்கான விதித் தொகுப்பு **(Code Of Regulations for Play Schools – 2015** பார்வை 1–ல் காணும் அரசாணையின்படி அரசிதழ் வெளியிட அரசால் ஆணையிடப்பட்டு, இளம் மழலையர் பள்ளிகளுக்கு ஒப்புதல் வழங்க பார்வை 2–ல் கண்டவாறு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. வெளியிடப்பட்ட அரசாணை மற்றும் விதித் தொகுப்பில் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளின் அடிப்படையில் சிட்லப்பாக்கம் ஒன்றியம், வட்டாரக் கல்வி அலுவலர்–III அவர்களிடமிருந்து பள்ளிப் பார்வை அறிக்கை பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட ஆவணங்கள் மற்றும் ஆய்வுக்குழு பரிந்துரையின் அடிப்படையில் கீழ்காணும் இளம் மழலையர் பள்ளி (Play Schools-க்கு ஒப்புதல் ஆணை கீழ்காணும் நிபந்தனைகளின்படி தற்காலிகமாக வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | ஒப்புதல் அளிக்கப்படும் பள்ளியின் பெயர் மற்றும் முகவரி | – KIDZ DALE PRE-PRIMARY SCHOOL, No.31,ANNA NAGAR EXTN, MUDICHUR ROAD, CHENNAI-63. |
| 2 | அனுமதிக்கப்படும் வகுப்புகள் | – Pre.KG to UKG |
| 3 | அனுமதிக்கப்படும் மாணவர்எண்ணிக்கை | – 55 |
| 4. | துவக்க அனுமதி அளிக்கப்படும் கல்வி ஆண்டு | – 2018 -2019 |
| 5. | பதிவு எண் | -03/2019 |

<u>நிபந்தனைகள்</u>

| | |
|---|---|
| 1 | பள்ளி கட்டிடம் சொந்தமாக (அல்லது ) குத்தகை பத்திரம் 5 வருடம் இருக்கப்பட வேண்டும். மேலும் R.C.C. கட்டிடமாக இருக்க வேண்டும். |
| 2 | பள்ளியை சுற்றிலும் சுற்றுச் சுவர் போடப்பட வேண்டும். |
| 3 | வகுப்பறைகள் கீழ்தளத்தில் மட்டுமே நடைபெறுதல் வேண்டும். |
| 4 | வகுப்பறைகளின் கதவுகள், ஜன்னல் ஆகியவை எளிதில் தீ பிடிக்க கூடாத பொருட்களை கொண்டு இருத்தல் வேண்டும். |
| 5 | குழந்தைகளுக்காக கழிப்பிடங்கள் தூய்மையாகவும் மற்றும் விளையாட்டிடத்தை முறையாக பராமரிக்க வேண்டும். |
| 6 | குழந்தைகள் எளிதாக தண்ணீரை எடுத்து செல்லும் விதமாக குடிதண்ணீர் வைக்கும் இடம் |

| | |
|---|---|
| | இருத்தல் வேண்டும். மேலும் குடிதண்ணீர் இருக்கும் இடம் கழிவறைக்கு அருகில் இருத்தல் கூடாது. |
| 7 | குடிநீர் தொட்டி சுத்தமாக வைக்கப்பட்டு முறையாக சுத்தம் செய்யப்பட வேண்டும். |
| 8 | குழந்தைகள் தூங்க நேரிடும் சமயத்தில் தூங்குவதற்கு போதிய இடவசதி செய்யப்பட்டிருக்க வேண்டும். |
| 9 | பள்ளிக்கு உள்ளும், வெளியும் போதிய இடவசதி இருத்தல் வேண்டும். |
| 10 | பள்ளிக் கட்டிடம் நேரடியாக ரோடு மார்கமாக இருத்தல் கூடாது. |
| 11 | போதிய தீ தடுப்பு சாதனங்கள் பள்ளியில் பராமரிக்கப்பட வேண்டும். |
| 12 | மின்சார ஒயர்கள் (மறைவாக Concealedசெய்யப்பட வேண்டும் |
| 13 | அவசர கால ஒலி எழுப்பும் மணி பள்ளியின் வெளிபுறத்தில் பொருத்தப்பட்டிருக்க வேண்டும். |
| 14 | CCTV Camera பள்ளியில் பொருத்தப்பட்டிருக்க வேண்டும். |
| 15 | பள்ளியின் வெளிவாயிலில் பாதுகாப்பிற்காக காவலர் நியமிக்கப்பட வேண்டும். |
| 16 | 15 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் வீதம் இருத்தல் வேண்டும்.<br>அவ்வாசிரியர்கள் கல்வித் தகுதி உடைய பெண் ஆசிரியர்களாக பள்ளி நிர்வாகம் நியமிக்க வேண்டும். |
| 17 | பள்ளிகளில் பணிநியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் குழந்தைகளை உடலால் தீங்கு விளைவிக்க கூடாது என பள்ளி நிர்வாகம் ஆசிரியர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். அவ்வாறு மீறும் பட்சத்தில் அவர்களை பணியிலிருந்து நீக்க பள்ளி நிர்வாகம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 18 | பள்ளியில் சேர்க்கும் குழந்தைகளுக்கு வயது 31.07 ல் 1 1/2 வயது குழந்தைகளை மட்டுமே பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும் . |
| 19 | பள்ளிக்கு 3 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள குழந்தைகளை மட்டுமே பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும். மேலும் குழந்தைகளை பள்ளியில் சேர்க்க எந்த தேர்வும் வைக்கக் கூடாது. |
| 20 | பள்ளியில் குழந்தைகள் உள்ளே நுழையும் போதும் வெளியே போகும் போதும் கண்டிப்பாக Register -ல் பதிவு செய்யப்பட வேண்டும். |
| 21 | பள்ளியில் (First Aid) முதலுதவிக்கான அனைத்து வசதிகளுடன் இருத்தல் வேண்டும் |
| 22 | அனைத்து வகை சான்றிதழ்கள் எ.பி.சி.டி மற்றும் சுகாதாரம் மற்றும் தீ தடுப்பு சான்றுகள் வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் வைக்கப்பட வேண்டும். |
| 23 | ஆசிரியர்களின் ஒரு மாத ஊதியம் மற்றும் வங்கியில் நிரந்தர வைப்பாக இருக்க வேண்டும். |
| 24 | குழந்தைகள் பாதுகாப்பாக இருக்கின்றனர் என்று நிர்வாகி உறுதிப்படுத்த வேண்டும். |
| 25 | பள்ளியில் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டால், இளம் மழலையர் பள்ளி விதியில் தெரிவிக்கப்பட்ட நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். |
| 26 | மூன்று மணி நேரத்திற்கு ஒரு Sectionமட்டுமே நடத்தப்பட வேண்டும். |
| 27 | குழந்தைகளுக்கு Emergency Treatment பள்ளி நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும். அவசர தேவைக்கு மருத்துவரின் விவரங்கள் பள்ளியில் வைக்க வேண்டும். |
| 28 | பள்ளி குழந்தைகளின் பெற்றோர்களின் Mobile No, Telephone No, E-Mail I.D. வீட்டு முகவரி ஆகியவை பள்ளி நிர்வாகம் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். |
| 29 | ECCE – யின் வழி நடத்துதலின்படி பாடத்திட்டம் வரையறுக்கப்பட்டு நடத்தப்பட வேண்டும். |
| 30 | மேலும் இளம் மழலையர் பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட CODE OF REGULATION-ல் சொல்லப்பட்ட அனைத்து நிபந்தனைகளையும், விதிகளையும் கடைபிடிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் வழங்கப்பட்ட தற்காலிக ஒப்புதல் திரும்ப பெறப்படும். |
| 31 | மாணவ, மாணவியரின் எண்ணிக்கைக்கேற்ப கழிவறைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். |
| 32 | பள்ளி நேரத்தில் மாணவர்களின் பாதுகாப்பிற்கு பள்ளி நிர்வாகமே முழுப்பொறுப்பாகும். |

29.5.19

மாவட்டக் கல்வி அலுவலர்,
புனித தோமையார் மலை(இ) குரோம்பேட்டை

28/5/19

பெறுநர்
KIDZ DALE PRE-PRIMARY SCHOOL,
No.31,ANNA NAGAR EXTN, MUDICHUR ROAD, CHENNAI-63.
நகல்
1.சிட்லப்பாக்கம், வட்டாரக் கல்வி அலுவலர். 2.கோப்பிற்கு.